EN/02/April- May/2025

# BELIEVERS EASTERN CHURCH

World Headquarters, St Thomas Community
Thiruvalla - 689 103, Kerala, India

## மேய்ப்பரின் மடல்

ஏப்ரல்/மே 2025

**எனக்கன்பார்ந்த மேய்ப்பர்களுக்கும் தூய திருச்சபையின் அனைத்து விசுவாசிகளுக்கும்,**

நம்முடைய ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவானவருடைய தயவும் இரக்கமும் சமாதானமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ✝ ஆமென்.

எமது திருச்சபை வரலாற்றில் மிக முக்கியமான தருணங்களில் ஒன்றான, எம்மை விட்டு பிரிந்து சென்ற அதி வணக்கத்துக்குரிய அத்தனேசியஸ் முதலாவது யோஹான் மெட்ரோபொலிட்டன் தந்தையாருடைய ஆசீர்வதிக்கப்பட்ட நினைவின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தை குறித்து உங்கள் அனைவரினதும் கவனத்தை செலுத்தும்படியாக நான் இன்று உங்களோடு பேசுகின்றேன். 2025ம் வருடம் மே மாதம் 08ம் திகதியுடன் அவர் நித்திய இளைப்பாறுதலுக்கு கடந்து சென்று முதலாவது ஆண்டு நிறைவடைகின்றது.

ஒரு திருச்சபையாக, அவர் இவ்வுலகை விட்டு பிரிந்து சென்றார் என்பதை ஏற்றுக்கொள்வது மிகவும் கடினமாக இருந்தாலும், அவருடைய நினைவுகளை உயிருடன் வைத்திருக்கும் வரப்பிரசாதம் எமக்கு கிடைத்துள்ளது. அவர் நமக்கு கற்பித்துள்ள போதனைகளின்படி வாழ்ந்து, அவர் ஆரம்பித்த பணிகளை தொடர்வதன் மூலம் - அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சென்று, அவருடைய வாழ்க்கையை பின்பற்றுமாறு உங்கள் அனைவரிடமும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். இந்த பொறுப்புக்கள் சுமையானது அல்ல, ஆனாலும் நாம் ஒவ்வொருவரும் இதை பெரும் மகிழ்ச்சியோடும் மரியாதையோடும் ஏற்று, ஆர்வத்தோடும் அர்ப்பணிப்போடும் இதைப் பற்றி பிடித்துக்கொள்ள வேண்டும்.

தூய திருச்சபையானது, எம்மை விட்டு பிரிந்து சென்ற அத்தனேசியஸ் முதலாவது யோஹ்ஹான் மெட்ரோபொலிட்டன் தந்தையாருடைய ஆசீர்வதிக்கப்பட்ட நினைவின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தை அனுசரிக்க ஆயத்தமாகிக் கொண்டிக்கின்றது. ஆகையால் நாம் அனைவரும் நம் இருதயத்தையும் மனதையும் இந்த புனிதமான அனுசரிப்பில் ஈடுபடுத்த வேண்டும். எம்மை விட்டு பிரிந்து சென்ற எமது ஆன்மீக தந்தையின் வாழ்க்கை மற்றும் கொள்கைகளைக் குறித்து எல்லாம் வல்ல இறைவனிடம் மன்றாடி, நன்றி செலுத்தி ஒரு திருச்சபையாக ஒன்று சேர வேண்டும். தயவு செய்து இந்த நினைவு தினத்தை உங்கள் நான்கு சுவற்றிற்குள் மட்டுப்படுத்தி செயலற்ற நினைவாக நிறுத்திவிடாதீர்கள். மாறாக ஒரு படி மேல் சென்று, எம்மை விட்டு பிரிந்து சென்ற ஆசீர்வதிக்கப்பட்ட நினைவாகிய எமது மெட்ரோபொலிட்டன் தந்தை செயல்படுத்தி எங்களுக்கு அவர் கற்றுக்கொடுத்தவைகளை, தேவையுள்ள உலகத்தாருக்கு அன்பையும் தயவையும் காண்பித்து அவருடைய நினைவுகளை செயல்படுத்துங்கள்.

உங்கள் ஆன்மீக தந்தையாக, எம்மை விட்டு பிரிந்து சென்ற ஆசீர்வதிக்கப்பட்ட நினைவாகிய எமது மெட்ரோபொலிட்டன் தந்தையின் வாழ்க்கை முறையின் மிக முக்கியமான அம்சங்களை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர நான் விரும்புகின்றேன். இதன் மூலம் குறிப்பிட்ட இந்த நாளில் மாத்திரமல்ல, ஒவ்வொரு நாட்களும் அவற்றை பின்பற்றி எம்மால் வாழ முடியுமாக இருக்கும்.

1. **கருணை மற்றும் தொண்டு தொடர்பான செயல்கள்:** ஏழைகள், நோயாளர்கள் மற்றும் மறக்கப்பட்டவர்களைக் குறித்து, எம்மை விட்டு பிரிந்து சென்ற ஆசீர்வதிக்கப்பட்ட நினைவாகிய எமது தந்தையின் இருதயம் நொறுக்கப்பட்டு, கிறிஸ்துவானவரைப் போலவே அவர்களை நேசிக்க தியாகங்களை செய்தார். ஆகையால், அவரை நினைவுக்கூரும் விதமாக, தொண்டு தொடர்பான செயல்களில் ஈடுபட்டு, நோயுற்றவர்களை சந்தித்து, உங்கள் சமுதாயத்தில் எளிமையான தொண்டு செயல்களில் ஈடுபடுமாறு மிகவும் தயவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

2. **தினசரி மன்றாட்டு மற்றும் பிரதிபலிப்பு:** ஒரு திருச்சபையாக இடைவிடாமல் மன்றாடும்படியாகவும், இயேசு கிறிஸ்துவின் மன்றாட்டை நம் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்றிக்கொள்ளும்படியாகவும் எம்மை விட்டு பிரிந்து சென்ற எமது தந்தை எம்மை ஊக்கப்படுத்தியுள்ளார். ஆகையால், தனிப்பட்ட மன்றாட்டு, குடும்ப மன்றாட்டு, தெய்வீக இறை வழிபாட்டில் கலந்துக்கொள்ளுதல், இயேசு கிறிஸ்துவின் மன்றாட்டை நம்பிக்கையோடு மன்றாடுதல் போன்றவற்றின் மூலம் ஆழமான ஒரு மன்றாட்டு வாழ்க்கைக்கு எம்மை அர்ப்பணிப்போமாக.

3. **திருச்சபைக்கும் சமூகத்தினருக்கும் பணிபுரிதல்** : எம்மை விட்டு பிரிந்து சென்ற எமது தந்தை, தூய திருச்சபையை முழு மனதுடன் நேசித்ததோடு, அதை கட்டியெழுப்ப அயராது பணியாற்றினார். அவர் தொடர்ந்தும் **"திருச்சபையைக் குறித்து சிந்தியுங்கள்"** என்று கூறினார். ஆகையால் நாம் எமது திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் அதன் மூலமாக சமுதாயத்தினருக்கு நல்லதொரு வாழ்வு கிடைக்கும்படியாகவும் எமது நேரத்தையும் திறமைகளையும் அர்ப்பணித்து அவருடைய பணியை தொடர்ந்தும் மேற்கொள்வோமாக. பங்குத்திருச்சபையில் பணிச் செய்ய எண்ணற்ற சிறிய மற்றும் பெரிய பல்வேறுபட்ட வாய்ப்புகள் உள்ளதோடு, திருச்சபை பணிக்கு உதவுதல், சமுதாயத்தினரை ஆதரித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு எமது ஒத்துழைப்பை வழங்க முடியும்.

4. **எதிர்கால தலைமுறையினர்களுக்காக நம்பிக்கையை பாதுகாத்தல்:** எம்மை விட்டு பிரிந்து சென்ற எமது தந்தை, சிறு பிள்ளைகளை அதிகமாக நேசித்ததோடு, எப்போதும் அவர்களுக்கு முன்னுரிமை அளித்தார். மறைக்கல்வி, பிலிவர்ஸ் யூத், பெண்கள் ஐக்கியம், மதப்போதனை (கெடகிஸம்), மன்றாட்டு மற்றும் முன்மாதிரியான வாழ்க்கை போன்றவற்றின் மூலமாக தூய திருச்சபையின் வாழ்க்கைக் குறித்து எமது எதிர்கால தலைமுறையினருக்கு வழங்க நாம் எம்மை அர்ப்பணிப்போம். எமது திருச்சபையை வடிவமைத்த விசுவாசம் மற்றும் பாரம்பரியத்தில், எமது எதிர்கால தலைமுறையினரை தொடர்ந்தும் நிலைநிறுத்தி வடிவமைப்போம் என்று எம்மை விட்டு பிரிந்து சென்ற எமது தந்தைக்கு உறுதிசெய்வோமாக.


எனக்கன்பார்ந்தவர்களே, கேட்பவர்களாக மட்டும் இருந்து விடாமல், மிகவும் முக்கியமாக அதை செயல்படுத்துகின்றவர்களாக இருக்க வேண்டும் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். எமது திருச்சபையின் தந்தையாகிய அத்தனேசியஸ் முதலாவது யோஹான் மெட்ரோபொலிட்டன் அடிகளாரின் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை முறையை முழு மனதுடன் தழுவிக்கொள்வோமாக.

அதே போல மற்றவர்களுக்கு பணிச் செய்யவும், எம்மில் முத்திரையிடப்பட்டுள்ள இயேசு கிறிஸ்துவின் சாயலை பிரதிபலிக்கவும், இயேசு கிறிஸ்துவின் கரங்கள், வாய் மற்றும் கால்களாக நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஆகையால், தொடர்ந்தும் கிறிஸ்துவைப்போல மாற செயல்படுவோமாக.

அவருடைய நினைவு என்றென்றும் நிலைத்திருப்பதாக!

தூய திரித்துவ இறைவனாகிய; பிதா, குமாரன், தூய ஆவியானவர் அவருடைய தயவினாலும் இரக்கத்தினாலும் நம்மை வழிநடத்தி, அவருடைய சிங்காசனத்தின் முன்னிலையில் அனைத்து புனிதர்களினதும், தூய தேவமாதாவினதும் மத்தியஸ்தத்தின் மூலமாக இப்பொழுதும் எப்பொழுதும் நமக்கு பாதுகாப்பு கிடைப்பதாக. – ✝ ஆமென்.

தகப்பனின் அன்புடனும் பிரார்த்தனையுடனும்



மோரன் மோர் சாமுவேல் தியோபிலஸ்
மெட்ரோபொலிட்டன் அடிகளார்.

**திகதி:** 15-ஏப்ரல்-2025
**இடம்:** உலகளாவிய தலைமையகம்

---

**கவனத்தில் கொள்க:** தயவு செய்து இதை உங்கள் பிராந்திய மொழியில் மொழிப்பெயர்த்து, விசுவாசிகளை தைரியப்படுத்தும்படியாக அனைத்து பங்குத்திருச்சபைகளிலும் வாசிக்கும்படியாக செயல்படுங்கள்.